இனிமையான குழந்தைகளே! நீங்கள் அன்பாக இனிய பாபா என்று கூறும் பொழுது வாய் இனிப்பாகி விடுகிறது, ஈஸ்வரன் அல்லது பிரபு என்று கூறுவதால் இனிப்பாவது கிடையாது.

கேள்வி: எந்த தொழில் சர்வசக்தி வாய்ந்த தந்தையினுடையது, மனிதனுடையது அல்ல?

பதில்: பதீத (தூய்மையற்ற) ஆத்மாக்களை பாவனம் (தூய்மை) ஆக்குவது, முழு உலகை புதிதாக்குவது, இந்த தொழில் தந்தையினுடையது, தந்தை தான் பாவனம் ஆவதற்கான சக்தி கொடுக்கின்றார். இந்த தொழிலை மனிதர்களால் செய்ய முடியாது. பகவான் என்ன நினைத்தாலும் செய்ய முடியும் என்று மனிதர்கள் நினைக் கின்றனர். நமது வியாதியைக் கூட போக்கி விட முடியும். நான் இப்படிப்பட்ட ஆசீர்வாதம் கொடுப்பது கிடையாது என்று பாபா கூறுகின்றார். நான் பாவனம் ஆவதற்கான யுக்தி (வழி) கூறுகிறேன்.

பாடல்: விழித்தெழுங்கள் நாயகிகளே விழித்தெழுங்கள் .........

ஓம்சாந்தி. எல்லையற்ற தந்தை குழந்தைகளை விழிப்படையச் செய்கின்றார். எந்த தாய் தந்தையிடமிருந்து சுகம் கிடைக்குமோ அவர் வந்து இருளிலிருந்து விழிப்படையச் செய்கின்றார். நீங்கள் தாய் தந்தையின் குழந்தைகள், நாம் காரிருளில் இருந்தோம், இப்போது விழிப்படைந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிவீர்கள். அனைவரும் ஈஸ்வரிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். முழு உலகம் மற்றும் முழு உலக மனிதர்களும் இறை தந்தையின் குடும்பமாகும். இறை தந்தை யைத் தான் தாய் தந்தை என்று கூறுகிறோம். இறை தந்தையானவர் தனது மனைவியின்றி குழந்தைகளை எப்படி பெற்றெடுப்பார்? குறிப்பாக பாரதவாசிகள் தான் நீங்கள் தாய் தந்தை என்று கூறுகின்றனர், ஆக இது குடும்பமாகி விடுகிறது. அவர்கள் பாடத் தான் செய்கின்றனர், நீங்கள் இங்கு நடைமுறையில் இருக்கிறீர்கள், மேலும் இறை தந்தையானவர் தனது குடும்பத்திரை விழிப்படையச் செய்து கொண்டிருக்கின்றார். விழித்தெழுங்கள் குழந்தைகளே! இப்போது இரவு முடிவடைகிறது. இப்போது பகல் வரயிருக்கிறது. ஞான சூரியன் வெளிப்பட்டதும்.. என்று பாடவும் செய்கின்றனர். ஆனால் பொருள் புரிந்து கொள்வது கிடையாது. எவ்வளவு தான் வேத சாஸ்திரங்கள் படித்திருக்கலாம், ஆனால் எதுவும் புரிந்து கொள்வது கிடையாது. யார் புரிந்திருக் கிறார்களோ அவர்கள் நல்ல முறையில் வருமானம் செய்கின்றனர். யார் புத்தியற்றவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் திவாலாகி விடுகின்றனர். குழந்தைகளே! மாயை உங்களை எவ்வளவு புத்தியற்றவர்களாக ஆக்கி விட்டது! ஓ இறை தந்தையே! என்று ஒருபுறம் கூறுகிறீர்கள், மற்றொரு புறம் பரமாத்மா சர்வவியாபி என்று கூறுகிறீர்கள். அனைத்து மனிதர்களும் சகோதர சகேதாரர்கள் என்று ஒருபுறம் கூறுகிறீர்கள், அதாவது நாம் ஒரு தந்தையின் குழந்தைகள். பிறகு நான், எங்கு பார்த்தாலும் நீ மட்டுமே தென்படுகிறாய். அதாவது நாம் அனைவரும் தந்தைகள் என்று கூறிவிடு கின்றனர். இப்போது தந்தை கூறுகின்றார், குழந்தைகளே! நாம் பரந்தாமத்திலிருந்து வருகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அனைத்து தர்மத்தினர்களும் ஏதாவது ஒரு மொழியில் ஓ இறை தந்தை என்று கூறுகின்றனர். ஆக தந்தை, தாயின் குடும்பம் ஆகிவிடுகிறது அல்லவா! யாரை

நீங்கள் நினைவு செய்கிறீர்களே அவரது தொழிலை அறிய வேண்டும் அல்லவா! என்று தந்தை கூறுகின்றார். அவர் இவ்வளவு பெரிய படைப்பை படைத்திருக்கின்றார். தந்தையிடம் முழு ஞானமும் இருக்கிறது. அவர் தான் ஞானக் கடல், ஞானம் நிறைந்தவர் என்று கூறப்படுகின்றார். அவர் சத்தியமானவர், சத்தியத்தை கூறக்கூடியவர் மற்றும் சதா அமரர் என்றும் கூறுகின்றனர். அமரக்கதை கூறுகின்றார்.

அமர்நாத் சிவபாபா நமக்கு அமரக்கதை கூறி அமரலோகத்திற்கு எஜமானர்களாக ஆக்கிக் கொண்டி ருக்கின்றார் என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். கற்றுக் கொண்டிருக்கின்ற அனைத்து குழந்தைகளும் யாருடைய குழந்தைகள்? தாய், தந்தையினுடையவர்கள். நீங்கள் அனைவரும் பார்வதிகள். உங்களுக்கு அமரக்கதை கூறிக் கொண்டிருக்கின்றார். இன்றிலிருந்து 5 ஆயிரம் ஆண்டிற்கு முன்பு சொர்க்கம் இருந்தது. உலகம் நாடகம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. சத்யுகம், திரேதா....... புது வீடானது பழையதாக ஆகிறது. சுவஸ்திகாவிலும் 4 பாகங்களை உருவாக்கு கின்றனர். இப்போது உங்களுக்கு முன்னேறும் கலையாகும். நீங்கள் முன்னேறுவதால்....... என்று பாடப்பட்டிருக்கிறது. அனைத்து மனிதர்களும் தமோ பிரதானம், துக்கத்திலிருந்து விடுபட்டு சதோ பிரதானமாக ஆகிவிடுகின்றனர். உலகமே சதோ பிரதானமாக ஆகிவிடும், பரம்பிதா பரமாத்மா அல்லது ஈஸ்வரன் என்று கூறுவதனால் மட்டும் பாபா (தந்தை) என்ற ரசனை (சுவை) ஏற்பட்டு விடுவது கிடையாது. எப்போது தன்னை குழந்தை என்று புரிந்து கொண்டு பாபா என்று கூறுவீர்களோ அப்போது தான் ஆஸ்திக்கான நறுமணம் வருகிறது. நாம் பாபாவின் குழந்தைகள், அனைத்து ஆத்மாக்களும் குழந்தைகள் தான், ஆனால் இப்போது தந்தை இந்த படைப்புகளைப் படைத்திருக்கின்றார். பதீத பாவன சீதாராம் என்று கூறுகின்றனர். சத்யுகத்தில் லெட்சுமி நாராயணன் பதீத பாவனனே வாருங்கள் என்று கூறமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பாவன மானவர்கள். சாது, சந்நியாசிகள் அனைவரும் பாடிக் கொண்டே இருக்கின்றனர். புது உலகில், புது பாரதம், புது இராம இராஜ்யம் வேண்டும் என்று காந்தியும் பாடினார், கைகளில் கீதையை வைத்துக் கொள்வார். ஏனெனில் கீதையின் மூலம் தான் மகா விநாசம் ஏற்பட்டது மற்றும் புது உலகம் ஸ்தாபனை ஆனது என்பதை அறிவார். கீதை அனைத்து சாஸ்திரங்களுக்கும் தாயாக விளங்கு கிறது, கீதை தாயாகும். நல்லது, தாயின் கணவன் யார்? பகவான். அவர் தான் பதீதமானவர்களை பாவனம் ஆக்கக் கூடியவர். பகவானின் மகாவாக்கியம்: கிருஷ்ணரை பதீத பாவன் என்று கூறுவது கிடையாது. மனிதர்கள் ஒருபோதும் பதீதமானவர்களை பாவனமாக ஆக்க முடியாது.

ஆத்மா பரமாத்மாவைப் பிரிந்து வெகு காலம் ஆகிவிட்டது என்று இப்போது இனிமையிலும் இனிய குழந்தைகளாகிய நீங்கள் கூறுகிறீர்கள். மகான் ஆத்மா, புண்ணிய ஆத்மா...... என்று கூறுகின்றனர். மகான் பரமாத்மா என்று கூறமாட்டார்கள். பிறகு ஏன் தன்னை சிவோஹம், பரமாத்மா என்று கூறிக் கொள்கின்றனர்? புண்ணிய ஆத்மா, பாவ ஆத்மா என்று கூறுகின்றனர், பிறகு நிர்லேப் (எதுவும் ஒட்டாது) என்று ஏன் கூறு கின்றனர்? பிராமணர்களாகிய நீங்கள் 84 பிறவிகள் எடுத்திருக்கிறீர்கள். பாரதத்தில் தான் அனைத்து விளையாட்டுக் களும் நடைபெறுகிறது. இதை சிவபாபா தான் புரிய வைக்கின்றார், பிரம்மா அல்ல. பிரம்மாவை நந்தியாக ஆக்கி விட்டனர். பிறகு

பிருகுட்டியில் (நெற்றியில்) சிவனை காண்பிக்கின்றனர். சிவனின் சவாரி பிருகுட்டியில் இருக்கிறது (நடக்கிறது). சிலர் மூதாதையர்களுக்கு உணவளிக்கின்றனர். ஆத்மாவை அழைக்கின்றனர், அதுவும் வந்து அருகில் அமர்கிறது. ஆத்மா ஒரு நட்சத்திரமாக இருக்கிறது. பிருகுட்டியின் நடுவில் நட்சத்திரம் போன்று ஜொலிக்கிறது என்று கூறுகின்றனர். இது எல்லையற்ற மிகப் பெரிய விளையாட்டு என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். விநாடிக்கு விநாடி எது கடந்து முடிகிறதோ அவ்வாறு மனிதர்கள் நாடகத்தின் ஆதாரத்தில் (பதிவாகி உள்ளதை) நடிக்கின்றனர். மனிதர்கள் 84 பிறவிகள் எப்படி எடுக்கின்றனர்? அனைவரும் 84 பிறவிகள் எடுத்து விடமாட்டார்கள். சிலர் இப்போதும் மேலிருந்து வந்து கொண்டிருக்கின்றனர். விழித்தெழுங்கள் நாயகிகளே ...... என்று இப்போது பாபா கூறுகின்றார். இளம் பெண்ணிற்கு திருமணம் நடைபெறும் போது அவரது தலையின் மீது மண் பானை வைத்து அதில் தீபம் ஏற்றுகின்றனர். இப்போது உங்களது ஆத்மா தீபத்தில் நெய் காலியாகி விட்டது என்று தந்தை கூறுகின்றார். இப்போது என்னை நினைவு செய்தால் நெய் நிறைந்து நிறைந்து தீபம் எறிய ஆரம்பித்து விடும். பிறகு நீங்கள் என்னிடத்தில் வந்து விடுவீர்கள். அந்த நிராகார தந்தை தான் படைப்பவர், டைரக்டர் மற்றும் முக்கிய நடிகராக இருக்கின்றார். யாரை நினைவு செய்கிறீர்கள்? பிரம்மாவையா? விஷ்ணுவையா? கிடையாது. துக்கத்தின் போது அனை வரும் இறை தந்தையை தான் நினைவு செய்கின்றனர். இது துக்கம், சுகம், வெற்றி, தோல்விக்கான

விளையாட்டு ஆகும். மாயை தோல்வியடையச் செய்கிறது, தந்தை வெற்றியடையச் செய் கின்றார். நான் தான் சர்வசக்திவான் அல்லவா என்ற கூறுகின்றார். நான் நோயாளியாக இருக்கிறேன், பகவான் ஆசீர்வாதம் செய்தால் நான் சரியாகி விடுவேன்...... என்று கிடையாது. நான் இது போன்ற தொழில் செய்வதற்காக வரவில்லை. நான் வந்திருப்பதே பதீதமானவர்களை பாவனம் ஆக்குவதற்காக, ஸ்ரீமத் கொடுப்பதற்காக. உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா, பிறகு வரிசைக்கிரமம் இருக்கிறது. மாலையும் இருக்கிறது அல்லவா! நாம் ஈஸ்வரிய குடும்பத்தினர்கள் என்பதை இப்போது நீங்கள் அறிந்து கொண்டீர்கள். எவ்வாறு சிவபாபாவின் மகிமை அளவற்றதோ அதே போன்று படைப்புகளின் மகிமையும் அளவற்றதாகும், அதே போன்று பாரதத்தின் மகிமையும் அளவற்றதாகும். பாரதத்தில் தான் தங்கம், வைரத்தினால் கட்டப்பட்ட மாளிகை இருந்தது. இறைவன் படைப்பவர் எனில் தாயும் தேவை .நீங்கள் இங்கு அமர்கின்றபொழுது முதலில் தந்தையின் நினைவு வர வேண்டும். பிறகு சூட்சுமவதனவாசிகளாகிய பிரம்மா, விஷ்ணு, சங்கர் பிரம்மா மூலம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது, இச்சமயத்தில் நீங்கள் ஈஸ்வரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், பிறகு தேவி தேவதா குடும்பத்தை சேர்ந்தவர்களாக ஆவிர்கள்.. அதுவும் சங்கமயுகத்தில் தான். சூரியவம்சி, சந்திரவம்சியின் விராட ரூப சித்திரமும் இருக்கிறது. குடுமி மட்டும் காண்பிக்காமல் விட்டு விட்டனர். தேவதா, சத்ரியா....... ஆனால் தேவதைகளுக்கு முன் எப்படி இருந்தோம்? இப்போது எல்லையற்ற தந்தை கூறுகின்றார்: மன்மனாபவ. என்னிடத் தில் புத்தியின் தொடர்பை ஏற்படுத்துங்கள் மற்றும் எல்லையற்ற ஆஸ்தியை எடுத்துக் கொள்ளுங்கள். பல பிறவிகளாக எடுத்திருக்கிறீர்கள். சத்யுகம், திரேதா வரை 21 பிறவிகளுக்கு எல்லையற்ற ஆஸ்தி எடுத்திருந்தீர்கள். இப்போது எதுவும் கிடையாது, மீண்டும்

தந்தையிட மிருந்து அடைய வேண்டும். பரமாத்மா பெயர், உருவமற்றவர், அவர் எப்படி இங்கு வர முடியும்? என்று அவர்கள் கூறுகின்றனர். அட ஸ்ரீமத் பகவத் கீதை என்று கீதையில் இருக்கிறது. பகவானின் மகாவாக்கியம்: கிருஷ்ணரை பகவான் என்று ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இவை அனைத்தும் நாடகத்தில் பதிவாகியிருக்கிறது. பகவான் நிராகாரமானவர், ஞானக் கடலானவர். பிறகு யார் இராஜ்யம் செய்கிறார்களோ அவர்களது மகிமை தனிப்பட்டதாகும். சர்வ குணங்கள் நிறைந்தவர், 16 கலைகளில் முழுமையானவர்கள்....... இந்த நேரத்தில் அனைவரும் இம்சை கொடுப்பவர்கள், காம விகாரத்தில் செல்லக் கூடியவர்கள். லெட்சுமி நாராயணனுக்கு இவ்வாறு கூறுவது கிடையாது. அவர்கள் சம்பூர்ணமாக உயர்வானவர்களாக இருந்தனர். ஆக தந்தையின் மகிமை தனிப்பட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியான பாகம் இருக்கிறது. ஆத்மா எவ்வளவு சிறியதாக இருக்கிறது, அதில் முழு பாகமும் நிறைந்திருக்கிறது. நானும் ஆத்மா தான், ஆனால் என்னை சுப்ரீம் என்று கூறுகிறீர்கள். பக்தி மார்க்கத்தில் பெரிய பெரிய லிங்கத்தை உருவாக்குகின்றனர். அதுவும் தவறாகும். ஆத்மாவானது அனைவருக்கும் நட்சத்திரம் போன்று ஒரே மாதிரியாக இருக்கிறது. ஞான சூரியன், ஞான சந்திரன், ஞான நட்சத்திரமும் இருக்கிறது. நாடகத்தில் இவ்வளவு நடிகர்கள் இருக்கின்றனர்! ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கான பாகம் இருக்கிறது. இந்த நாடகம் எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது! இது இயற்கையான நாடகம் என்று கூறப்படுகிறது. மற்றபடி அந்த மேடை நாடகம் (திரைப்படம்) பொதுவான தாகும். 4 மணி நேரத்திற்கான ரீல் (படச்சுருள்) இருக்கும். இதன் ரீல் 5 ஆயிரம் ஆண்டிற்கானது. இந்த கலியுகத்தின் ஆயுள் 4 இலட்சம் 32 ஆயிரம் ஆண்டுகள் உள்ளன என்று அவர்கள் கூறுவர். எவ்வளவு கட்டுக் கதையாக இருக்கிறது. மரணம் எதிரிலேயே இருக்கிறது. அதுவும் காரிருளில் இருக்கின்றனர்.

இப்போது விழிப்படையுங்கள் என்று தந்தை கூறுகின்றார். பக்தர்களாகிய நீங்கள் பகவானை நினைவு செய்து வந்தீர்கள். பக்தி மார்க்கம் அழியப் போகிறது என்று இப்போது தந்தை கூறுகின்றார். ஞானத்தின் மூலம் பகல் உருவாக்க நான் வந்திருக்கிறேன். இந்த நேரத்தில் மனிதர்களுக்குள் எவ்வளவு கோபம் இருக்கிறது! சண்டையிட கற்றுக் கொண்டே இருக்கின்றனர். எப்போது இராவண இராஜ்யம் ஆரம்பமானதோ அப்போது இவை அனைத்தும் ஆரம்பமாகிறது. சத்யுகத்திலோ இராம இராஜ்யம் இருக்கும். நான் குழந்தைகளாகிய உங்களை இராஜாவிற்கெல்லாம் இராஜவாக ஆக்கு கிறேன் என்று இப்போது தந்தை கூறுகின்றார். பிறகு நீங்கள் வீழ்ச்சியடையும் போது தூய்மையான இராஜாக்கள் தூய்மையை இழந்து விடுகிறீர்கள். இப்போது அவர்களும் கிடையாது. சிவபாபா பிரம்மா மூலம் கூறுவதாக எப்போதும் நினையுங்கள் என்று தந்தை கூறுகின்றார். அதை கேட்டு இவர்கள் மகாராஜா, மகாராணியாக ஆகியிருந்தனர், இப்போது அவர்களே பதீதமாக ஆகிவிட்டனர். இது அசுர உலகமாகும். அது ஈஸ்வரிய உலகமாகும். இராமர் மற்றும் இராவணன் என்ற பெயர் மிகவும் பிரபல மானதாகும். இராவணன் என்பதன் பொருளை யாரும் புரிந்து கொள்வது கிடையாது. ஆண் மற்றும் பெண் இருவருக்குள்ளும் 5 விகாரங்கள் இருக்கிறது, அதனால் தான் 10 தலைகள் காண்பிக்கின்றனர், அதனால் தான் இது இராவண இராஜ்யம் என்று கூறப்படுகிறது. தீபாளியன்று பூஜை செய்கின்றனர். மகாலட்சுமிக்கு 4 கைகள் கொடுக்கின்றனர். இரண்டு லெட்சுமிக்கு, இரண்டு நாராயணனுக்கு. மற்றபடி விஷ்ணு என்பவர் வேறு தனிப்பட்டவர் கிடையாது.

இப்போது நீங்கள் இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக, இரட்டை கிரீடதாரிகளாக ஆவீர்கள். இந்த நேரத்தில் நீங்கள் சுயதரிசன சக்கரதாரிகளாக ஆகிறீர்கள். நாம் 84 பிறவிகள் எடுக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். எல்லையற்ற தந்தையிடமிருந்து எல்லையற்ற சுகம், எல்லைக்குட்பட்ட தந்தையிடமிருந்து எல்லைக்குட் பட்ட சுகம் கிடைக்கிறது. சத்யுகம் பிரம்மாவின் பகலாகும், கலியுகம் பிரம்மாவின் இரவாகும். பிரஜாபிதாவும் அவசியம் இங்கு இருப்பார். அனைவரும் சிவபாபாவின் குழந்தைகள். பிறகு பிரம்மாவின் மூலம் பிராமணர்கள் மற்றும் பிராமணிகள் படைக்கப்படுகின்றனர். இல்லையெனில் இவ்வளவு குழந்தைகள் எப்படி தத்தெடுக்கப்படுவர்! சிவபாபா பிரம்மாவின் மூலம் தத்தெடுக்கின்றார். என்னுடையவர்கள் நீங்கள் தான் என்ற தந்தை கூறுகின்றார். இப்போது உங்களுக்கு புது பிறவி கிடைத்திருக்கிறது. தாத்தாவின் ஆஸ்தி உங்களுக்கு கிடைக்கிறது, பிரம்மாவின் மூலம் உலக இராஜ்யம் கிடைக்கும். பிரம்மா சூட்சுமவதனத்தில் காண்பிக்கப்படுகின்றார். ஆனால் அங்கு எப்படி சந்தீப்பீர்கள்? முரளி நடத்து வதற்கு பாபாவிற்கு அவசியம் ரதம் தேவை. பாரதத்தின் நம்பர் ஒன் சாஸ்திரம் கீதையாகும். மற்ற அனைத்து சாஸ்திரங்களும் குழந்தைகளாகும். முதலில் தேவதைகளின் வம்சம், பிறகு சத்ரியர்கள்.... யாரெல்லாம் தர்மத்தை ஸ்தாபனை செய்கிறார்களோ அவர்கள் முதலில் சதோ பிறகு ரஜோ, தமோவில் வருகின்றனர். கிறிஸ்து வருகிறார் எனில் அவர் முதலில் தூய்மையாக இருந்தார். பாவ காரியம் ஏற்படாத வரை தண்டனையும் அடைய முடியாது. சத்யுகத்தில் தூய்மை யான ஆத்மாக்கள் வருவர். அங்கு மாயையே கிடையாது எனும் போது துக்கமும் கிடையாது. எப்போது விகார மார்க்கத்தில் செல்கிறோமோ அப்போது தான் பாவ காரியங்கள் ஆரம்பமாகிறது. இது புரிந்து கொள்ள வேண்டிய விசயமாகும். விகர்மத்தை வெற்றி அடைந்த இராஜ்யமும் இருக்கிறது, பிறகு விகர்மத்தின் இராஜ்யமாகும். கதைகள் பல இருக்கின்றன. மோகத்தை வென்ற இராஜாவின் கதை, மோகத்தை வென்றவர்கள் லெட்சுமி நாராயணன் ஆவர். அது இராம இராஜ்ய மாகும். இப்போது இராவண இராஜ்யமாகும். இராவணனை எரிக்கின்றனர். அரைக் கல்பம் இராம இராஜ்யம், பிறகு அரைக் கல்பத்திற்குப் பிறகு இராவண இராஜ்யம் ஏற்படுகிறது. இந்த சுயதரிசன சக்கரத்தை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் அனைவரும் இறை தந்தையின் குழந்தைகள். தந்தை நேரடியாக பிரம்மாவின் மூலம் தத்தெடுத்திருக்கின்றார், ஆகையால் உங்களை செல்லக் குழந்தை கள் என்று கூறுகின்றார். நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ஆத்மா என்ற தீபத்தை சதா ஏற்றி (அணையாமல்) வைப்பதற்காக நினைவு என்ற நெய்யை ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும். நினைவின் மூலம் ஆத்மாவை சதோ பிரதானமாக ஆக்க வேண்டும்.

2) சதா ஞான வெளிச்சத்தில் இருக்க வேண்டும். எல்லையற்ற நாடகத்தை புத்தியில் வைத்து சுயதரிசன சக்கரதாரி ஆக வேண்டும்.

வரதானம் வீண் சங்கல்பங்களின் (எண்ணங்களின்) வேகமான பிரவாகத்தை

: (ஓட்டத்தை) விநாடியில் நிறுத்தி, நிர்விகல்ப (தவறு ஏற்படாத, செய்யாத நிலை) ஸ்திதியை
அமைத்துக் கொள்ளக் கூடிய சிரேஷ்ட பாக்கியவான் ஆகுக.

ஏதேனும் தவறு நேர்ந்து விட்டால், தவறு நேர்ந்த பிறகு ஏன், என்ன, எப்படி, இப்படி இல்லை, அப்படி இது போல் யோசிப்பதில் நேரத்தை வீணாக்காதீர்கள். எவ்வளவு நேரம் யோசிக்கும் சொரூபமாக ஆகிறீர்களோ, அவ்வளவு கறை மேல் கறை படியச் செய்கிறீர்கள். பேப்பருக்கான நேரம் குறைவாக உள்ளது. ஆனால் வீணானவற்றை யோசிப்பதற்கான சம்ஸ்காரம் பேப்பருக்கான நேரத்தை அதிகப் படுத்தி விடும். எனவே வீண் சங்கல்பங்களின் வேகமான பிரவாகத்தைப் பரிவர்த்தன் (மாற்றக் கூடிய) சக்தி மூலம் விநாடியில் நிறுத்தி விடுவீர் களானால் நிர்விகல்ப ஸ்திதி அமைந்து விடும். எப்போது இந்த சம்ஸ்காரம் இமர்ஜ் ஆகிறதோ, ஏற்படுகிறதோ, அப்போது உங்களை பாக்கியவான் ஆத்மா எனச் சொல்வார்கள்.

சுலோகன்: குஷியின் கஜானாவினால் நிரம்பியவராக ஆவீர்களானால்

மற்ற அனைத்துக் கஜானாக்களும் தாமாகவே வந்து விடும்.